1974 சனவரி 30]

திரு. வை. பாலசுந்தரம்: இலங்கையில் இருந்து வருகிற அகதிகளாகிய தமிழர்கள் வேறு மாநிலங்களிலும் குடியேற்றப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னுடைய துறை வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பெயர்களை அனுப்புவது பற்றி. தனிக்கேள்வி வேறு துறைக்குப் போட வேண்டும்.

விவசாயக் கல்வி குறித்து ஆய்வு

* 258. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயக் கல்வி குறித்து ஆய்வு நடத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த ஆய்வுக்கு நிதி உதவி வேண்டி சர்வ தேச அபிவிருத்தி சங்கத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) முதல் (உ) வரை—தமிழ் நாட்டில் வேளாண்மைக் கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கிகளின் உதவி 6 கோடி அளவுக்கு என்று கூறப்படுகிறது. 5—2—1973 அன்று உலக வங்கியின் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். அதன் பிறகு உதவியின் அளவு 15 கோடிக்கு உயர்த்தப்பட்டது. 9—12—1973 அன்று உலக வங்கியின் பிரதிநிதிகள் தமிழ்நாட்டுக்கு வந்து 3 நாள் பேசினார்கள். இந்த வருடத்தில் நல்ல முடிவு உலகவங்கியிடம் இருந்து வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: விவசாயக் கல்லூரியில் இடம் தேடுகிற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. நம்முடைய தேவையையும் கருதி விவசாயக் கல்லூரியில் அவசரமாக அதிக எண்ணிக்கையை ஏற்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. பி.எஸ்.சி. அக்ரிகல்சர், பி.எஸ்.சி. ஆர்டிகல்சர், பி.எஸ்.சி. என்ஜினியரிங் என்று. இதில் பி.எஸ்.சி. என்ஜினியரிங் பகுதியை விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது.